**கவனிக்க.–** *2007.09.21 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*



# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1517 - 2007 සැප්තැම්බර් 28 වැනි සිකුරාදා - 2007.09.28

*1517 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 856 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 860 |


*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள்* ***வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.*** *வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.*

*வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்*** *இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, ஒற்றோபர் 05 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, செத்தெம்பர் 21 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக் குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரசகரும மொழித்தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்கு விதிகள், தாபனக் கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3 : 1 : 1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்தி வைக்கலாம்.

3 : 1 : 2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடை நிறுத்தப்படும். அந்த இடை நிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 3:1:6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3 : 1 : 5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3 : 1 : 6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3 : 1 : 7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3 : 1 : 8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்த்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவு தொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்தி நிதியத்துக்குத் தனது உதவு தொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளன் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்த போதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின் கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவயாற்றிவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாது காப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர்;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலி சாரிடம பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகாரசபையால் பரிசீலனை செய்வதற்குறப்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் .

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப் படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம், முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை , மாட்டுத்தாள், முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப்பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்.**

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப் படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்று பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டு வரமறந்து போனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனிரேகைத் தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக்கருவிகள், பென்சில். அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப்பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப் பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்கு கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள்-வெற்றிடம்

### தேசிய சுவடிகள் திணைக்களத்தில் இலங்கை தொழில்நுட்ப சேவையின் கட்டட பராமரிப்பு உத்தியோகத்தர் (II ஆ பிரிவு) பதவிக்கான விண்ணப்பம் சம்பந்தமான அறிவித்தலை மறுசீரமைத்தல்

இலங்கை தொழில்நுட்ப சேவையின் தேசிய சுவடிகள் திணைக்களத்தில் கட்டட பராமரிப்பு பதவிக்கான உத்தியோகத்தர் (II ஆ பிரிவு) களை சேர்த்துக்கொள்ளும் விதிமுறை 2006.01.06 ஆந் திகதிய 1426/34 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கூறப்பட்ட இலங்கை தொழில்நுட்ப சேவை விதிமுறைகளுக்கிணங்க ஆட்சேர்ப்புத்தகைமை மாற்றியமைக்கப் பட்டுள்ளது. ஆகவே 2007.07.06 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலுக்கமைய விண்ணப்பித்தோரில் தகைமை யுடைய விண்ணப்பதாரிகள் மட்டும் எழுத்துமூலப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

(கலாநிதி) சரோஜா வெத்தசிங்ஹ,
பணிப்பாளர்,
தேசிய சுவடிகள் திணைக்களம்.

9-1062

---

### அரசாங்க அச்சுத் திணைக்களம்

### இலங்கை அச்சிடற் சேவை வகுப்பு III தரம் III இன் ஒப்புநோக்காளர் (தமிழ்/ஆங்கிலம்) பதவிகள்

இலங்கை அச்சிடற் சேவை வகுப்பு III தரம் III இன் ஒப்புநோக்காளர் (தமிழ்/ஆங்கிலம்) பதவிகள் வெற்றிடங்களை நிரப்பும்பொருட்டு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ் அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பூர்த்திசெய்யப்பட்டு 2007.10.30 ஆந் திகதியன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியவாறு "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம். (அஞ்சல்பெட்டி 507) இல. 118. டாக்டர் டனிஸ்ட்டர் டீ சில்வா மாவத்தை, கொழும்பு 08" எனும் முகவரிக்கு பதிவஞ்சலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்தை தாங்கி வரும் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "ஒப்புநோக்காளர் (தமிழ்/ஆங்கிலம்) பதவி" என குறிப்பிடப்படல் வேண்டும்.

**குறிப்பு**.- (அ) பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தையோ அல்லது அது தொடர்பான வேறு ஆவணங்களையோ அரசாங்க அழுத்தகரைத் தவிர வேறு எந்த அலுவலருக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்பி வைத்தல் ஆகாது.

(ஆ) விண்ணப்பப்படிவம் மற்றும் அது தொடர்பான ஆவணங்கள் அஞ்சலில் அனுப்பப்படும்போது தொலைந்து போதல் அல்லது தாமதம் நேரிடல் போன்றவை சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் கவனத்திற்கெடுக்கப்பட மாட்டா.

(இ) தற்போது அரசாங்க மற்றும் கூட்டுத்தாபன சேவையில் உள்ள அலுவலர்களாயின் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்கள/நிறுவனத் தலைவர்களினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

2. **சம்பளத்திட்டம்**.- இப்பதவிக்கான மாதாந்த திரட்டிய சம்பளம்.- ரூபா 14,420 -10x140-11x150-6x210-14x290 - ரூபா 32,700 ஆகும்.

3. **வயது எல்லை**.- 2007.10.30 ஆந் திகதியன்று 45 வயதை மேற்படாதிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இந்த வயதெல்லை ஏற்புடைத்தாகாது.

4. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்**.- கல்விப் பொதுத் தராதரப்பத்திரப் (சா. தரம்) பரீட்சையில் தமிழ்மொழி, ஆங்கிலமொழி, கணிதம்/எண்கணிதம் மற்றும் வேறு மூன்று பாடங்களில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் சித்தி பெற்றிருத்தல் அல்லது இதற்கு சமமான தகைமைகள் கொண்டிருத்தல்;

அத்துடன்

கல்விப் பொதுத் தராதரப்பத்திரப் (உயர் தரம்) பரீட்சையில் தமிழ்மொழி, ஆங்கிலமொழி ஆகிய பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் (உயர் தரம்) பரீட்சையில் தமிழ்மொழி/ஆங்கில மொழி பாடங்களில் சித்திகளை பெற்றிராத விண்ணப்பதாரிகள் விடயத்தில் இப் பாடங்கள் தொடர்பில் கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சா. தரம்) பரீட்சையில் அதிவிசேடசித்தி பெற்றிருத்தல் அவசியமாகும்.

5. **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள்**.- இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியத்துக்கு உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் விதவைகள், அநாதைகள்/தபுதாரர், அநாதைகள், ஓய்வூதிய நிதியத்துக்கு பங்களிப்பு செய்தல் வேண்டும்.

6. **பொதுவான நிபந்தனை**.- தாபன விதிக்கோவை அத்தியாயம் II இன் பிரிவுகள் 12.1 மற்றும் 12.6 தொடக்கம் 12.12 விரையான பிரிவுகள் ஏற்புடைத்தாகும்.

7. **ஆட்சேர்ப்புச் செய்யப்படும் விதம்**.- விண்ணப்பதாரிகள். எழுத்து மூலமான பரீட்சையொன்றுக்கும். வாய்மொழி மூலமான பரீட்சைக்கும் உட்படுத்தப்பட்டு, அதன்பெறுபேறுகளுக்கு அமைய தெரிவுசெய்யப்படுவர். இதன்பின்னர். பயிலுநர் ஒப்புநோக்காளர்கள் சேவையில் சேர்த்துக்கொள்ளப்படுவர். இரண்டு ஆண்டுப் பயிற்சிக்காலத்தை திருப்திகரமான முறையில் பூர்த்திசெய்யும் பயிலுநர் ஒப்புநோக்காளர்கள். இதன்பின்னர் நடாத்தப்படுவதான ஒப்புநோக்காளர் பரீட்சையில் சித்திபெற்றதன் பின்னர், மூன்றாண்டு நன்னடத்தைக் கால அடிப்படையில் ஒப்புநோக்காளர் பதவியில் நியமிக்கப்படுவர்.

8. இவ் வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (II அ) வின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவை நியமனங்கள் தொடர்பான பொது நிபந்தனைகளின்பால் விண்ணப்பதாரிகளின் கவனம் கோரப்படுகின்றது.

லக்ஷ்மன் குணவர்த்தன.
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்.
118. டாக்டர் டனிஸ்டர் டீ சில்வா மாவத்தை,
கொழும்பு 8.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசாங்க அச்சுத் திணைக்களம்**

*இலங்கை அச்சிடற் சேவை வகுப்பு III தரம் III ஐச் சேர்ந்த ஒப்புநோக்காளர் (தமிழ்/ஆங்கிலம்) பதவிகள்*

1. (அ) முழுப்பெயர் :----.
   (ஆ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.

2. (அ) அஞ்சல் முகவரி :----.
   (ஆ) நிரந்தர முகவரி :----.

3 (அ) பிறந்த திகதி ;-
   .................. ஆண்டு ..................மாதம் ..................திகதி
   (ஆ) 2007.10.30 ஆந் திகதியன்று வயது:
   ............... ஆண்டுகள் ........... மாதங்கள் ..............நாட்கள்
4. மாவட்டம் :----.
5. பால் (ஆண்/பெண்)
6. திருமணமானவரா, திருமணமாகாதவரா? :----.
7. நீர் இலங்கைப் பிரசையா? :----.
8. கல்வித் தகைமைகள் :----.

(அ) க. பொ. த. (சா. தரம்) :-

| பாடங்கள் | சித்தி | பாடங்கள் | சித்தி |
|---|---|---|---|
| 1 | | 5 | |
| 2 | | 6 | |
| 3 | | 7 | |
| 4 | | 8 | |

(ஆ) க. பொ. த. (உயர் தரம்) :-

| பாடங்கள் | சித்தி |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |

9. தொழில் தொடர்பான வேறு தகைமைகள் :----.
10. ஏதேனும் குற்றச்செயல் தொடர்பாக நீதிமன்றமொன்றால் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா:----.

இவ் விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும் பிழையற்றவையென்றும் இத்தால் உறுதியுரைக்கின்றேன். இதில் தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை என்றோ பிழையானவை என்றோ பதவியில் நியமிக்கப்பட்ட பின் கண்டுபிடிக்கப்பட்டால் இப்பதவிக்கு நான் தகுதியற்றவனாவேன் என்பதையும், எதுவித நட்டஈடுமின்றி பதவியின்றும் நீக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி:----.

**திணைக்கள/ நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

(தற்போது, அரசசேவையில்/மாகாண அரச சேவையில்/உள்ளூராட்சி சேவையில் கடமையாற்றும் விண்ணப்பதாரிகளுக்கு மட்டும் ஏற்புடைத்தாகும்)

திரு./திருமதி/செல்வி .................................... என்பவர் இத் திணைக்களத்தில் /கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றுபவர் என்றும். அவரது வேலையும் நடத்தையும் திருப்திகரமானவையென்றும், இவ் அறிவித்தலில் குறிப்பிட்ட பதவிதொடர்பாக கேட்கப்பட்டுள்ள தகைமைகளை கொண்டுள்ளார் என்றும்; அவர் இப்பதவி தொடர்பில் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில், தற்போது கடமையாற்றும் பதவியினின்றும் விடுவிக்க முடியும்/ முடியாது என்றும் இத்தால் சான்றுரைக்கிறேன்.

-----,
திணைக்கள / நிறுவனத் தலைவரின்
கைகொப்பமும் பதவிப்பெயரும்

திகதி :----.

9 - 1064

---

**இலங்கைப் பாராளுமன்றம்**

பதவி வெற்றிடம்

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் நிலவும் பின்வரும் பதவி வெற்றிடத்துக்கு நல்ல தேகாரோக்கியமும் சிறந்த நல்லொழுக்கமும் கொண்ட இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதன் கீழ், தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2007. 10. 19 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக "பாராளுமன்றச் செயலாளர் நாயகம். இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கின்ற பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.

**1. வளிச்சீராக்கல், குளிரூட்டல் தொழில்நுட்பவியலாளர் பதவி**

(பதவி எண்ணிக்கை - 01)

1.1 **சம்பள அளவுத்திட்டம்.**- மாதமொன்றிற்கு ரூ 13,360 - 9 x 120/ 10 x 130 - 3 x 185 - ரூபா 16,295 ஆகும். (இச்சம்பள அளவுத்திட்டத்தின் கீழ் படிகளுடனான ஆகக்குறைந்த மாதாந்த ஊதியம் அண்ணளவாக ரூ. 23,500 ஆகும்) திருப்திகரமான பத்து வருட சேவையைப் பூர்த்தி

செய்யும் வளிச் சீராக்கல்- குளிரூட்டல் தொழில்நுட்பவியலாளர் ஒருவர் சிரேஷ்ட வளிச்சீராக்கல்- குளிரூட்டல் தொழில்நுட்பவியலாளர் பதவிக்குத் தரமுயர்த்தப்படுவதற்குத் தகைமை அடைவதுடன், அவர், மாதமொன்றிற்கு ரூ. 14,320 - 1 X 120- 10X 130- 4X 140- 6X185- ரூபா 17,410 என்ற சம்பள அளவுத்திட்டத்திலும் அமர்த்தப்படுவார். (இச்சம்பள அளவுத்திட்டத்தின் கீழ் படிகளுடனான ஆகக்குறைந்த மாதாந்த ஊதியம் அண்ணளவாக 25,600 ஆகும்.)

1.2 **வயதெல்லை.**- 2007.10.19 ஆந் திகதியன்று 25 வயதுக்குக் குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

1.3 **கல்வித் தகைமைகள்** .- க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் 3(மூன்று) (திறமைச்சித்தி களுடன் கணிதம் அடங்கலாக 06 (ஆறு) பாடங்களில் சித்தி

1.4 **தொழில்சார் தகைமைகள்** .-

(அ) தேசிய தொழிற்பயிற்சி மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் நடாத்தப்படும் வளிச்சீராக்கல், குளிரூட்டல் பற்றிய இரண்டரை வருட முழு நேரக் கற்கைநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(ஆ) இலங்கை - ஜெர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகத்தினால் (CGTTI) நடாத்தப்படும் வளிச்சீராக்கல், குளிரூட்டல் பற்றிய மூன்று வருட முழுநேரக் கற்கை நெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

1.5 **அனுபவம்** .- பெயர்பெற்ற நிறுவனமொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் 05 வருட அல்லது அதற்கு மேற்பட்ட அனுபவம்

1.6 **ஆட்சேர்ப்பு முறை** - எழுத்துமூல/தொழில்சார் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம்

**2 தொழில் நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :**

2.1 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையது மாகும். நியமனமானது முதலில் மூன்று வருட காலத்திற்குத் தகுதிகாண் நிலையில் இருக்கும். அரச சேவை/மாகாண அரச சேவையில் இருக்கும் நிரந்தரமான, தன்னுடைய நியமனத்தில் உறுதிப்படுத்தப்பட்ட அலுவலர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அவர் ஒரு வருட காலத்திற்கு பதில் நியமன அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

2.2 தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டடொகுதிக்குப் பொருத்தமான நிதி மற்றும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கு உட்படுவர்.

2.3 தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் விதுரர்கள், விதவைகள் மற்றும் அனாதைகளுக்கான ஓய்வூதிய நிதியத்திற்கு அராசங்கத்தினால் தீர்மானிக்கப்பகின்ற வாறாக அவரின் சம்பளத்தின் குறிப்பிட்டதொரு வீதத்தினையும் செலுத்த வேண்டும்.

2.4 தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

2.5 நியமனம் செய்யப்படுவதற்கு முன்பதாக அவர்கள் தொடர்பான பாதுகாப்பு அறிக்கை பெறப்படும்.

2.6 விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப் பிரதிகள் அல்ல) இணைத்தல் வேண்டும். சான்றிதழ்களின் மூலப் பிரதியைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படுமிடத்து அவற்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும் ;-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள்;
(இ) தொழில்சார் தகைமைகளுக்கான சான்றிதழ்கள்;
(ஈ) அனுபவம் பற்றிய சான்றிதழ்கள்
(உ) விண்ணப்பதாரியின் நடத்தை தொடர்பாக அண்மையில் பெற்ற இரு நற் சான்றிதழ்கள்

(ஏற்கனவே அரச சேவையில்/மாகாண அரச சேவையில் / அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளின் சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் நற்சாட்சிப் பத்திரப் பிரதிகளை இணைக்கவேண்டிய தேவையில்லை)

2.7 ஏற்கனவே அரச சேவையில்/மாகாண அரச சேவையில்/ அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளின் சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை உரிய திணைக்களங்களின் /நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாக அனுப்ப வேண்டும்.

2.8 எவ்விதத்திலேனும் தமக்கு ஆதரவு தேட முனைதல் ஒரு தகைமையீனமாகும்.

2.9 விண்ணப்பத்தில் தரப்பட்டிருக்கும் விபரங்கள் எவையேனும் உண்மைக்குப் புறம்பானவை அல்லது பிழையானவை எனத் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்டால் தகைமை நீக்கத்திற்கும். அது நியமனத்திற்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி பதவி நீக்கத்திற்கும் ஆளாவர். விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அத்தாட்சிப் பத்திரங்களின் பிரதிகளின்றி அனுப்பப்படும் விண்ணப்பங்களும் திணைக்கள/ நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்பப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். திணைக்கள/நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்பப் படும் விண்ணப்பங்களும் முடிவுத் திகதிக்குப் பின்பு கிடைப்பின் நிராகரிக்கப்படும். மாதிரி விண்ணப்பப் படிவங்களுக்கேற்ப தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

இலங்கை பாராளுமன்றம்.
ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கோட்டே
2007.09.28

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பாராளுமன்றம்**

.................................... பதவி

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு/திருமதி/செல்வி) :----.
(ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :----.

2. முகவரி :-

(அ) தனிப்பட்ட :----.
(தொலைபேசி இல:.............)

(ஆ) உத்தியோகபூர்வ :----.
(தொலைபேசி இல:.............)

3. (i) பிறந்த திகதி (பிறப்புச்சாட்சி பத்திரத்தின் பிரதி இணைக்கப்படவேண்டும்) :----.
(ii) 2007.10. 19 இல் வயது :-
வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள்:----.

4. திருமணமானவரா அல்லது தனியானவரா? :----.

5. பால் (ஆண்/பெண்) :----.

6. இலங்கைப் பிரசையா எனக் குறிப்பிடவும் :----.

7. தேசிய அடையாள அட்டை இல :----.

8. கல்வித் தகைமைகள் : (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்க வேண்டும்)

| சித்தியடைந்த பரீட்சைகளும் வருடங்களும் | பாடங்கள் | தரம் |
|---|---|---|
| | | |

9. தொழில் தகைமைகள் : (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்க வேண்டும்)

10. அனுபவம் ; (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்க வேண்டும்)

11. தற்போதைய தொழில் பற்றிய விபரங்கள் :-

(அ) நிறுவனத்தின் பெயரும் முகவரியும் :----.

(ஆ) தற்போதைய பதவி :----. நியமனத் திகதி :----.

(இ) வருடாந்த திரட்டிய சம்பள அளவுத்திட்டம் :----.

(ஈ) மாதாந்த திரட்டிய சம்பளம் :----.

(உ) மாதாந்த படிகள் :----.

12. நீங்கள் நீதிமன்றத்தில் குற்றச் செயல்களுக்காகத் தண்டிக்கப்பட்டுள்ளீர்களா :----.
அவ்வாறாயின் விபரங்களைத் தரவும் -

13. இதற்கு முன்பு அரச சேவையில் பணியாற்றியிருக்கின் றீர்களா? :----.
அவ்வாறாயின் விபரங்களையும், தொழில் முடிவுறுத்தப்பட்ட தற்கான காரணங்களையும் தரவும்-

14. பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகள் (மூலப்பிரதிகள் அல்ல) இணைக்கப்பட்டுள்ளன;

(அ) பிறப்புச் சான்றிதழ்
(ஆ) கல்வித் தகைமைக்கான சான்றிதழ்கள்
(இ) தொழில் தகைமைக்கான சான்றிதழ்கள்
(ஈ) அனுபவச் சான்றிதழ்கள்
(உ) இரண்டு சமீபத்திய நற்சான்றிதழ்கள்

(ஏற்கனவே அரச சேவை/மாகாண அரச சேவை/ அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சபைகளில் இருக்கும் விண்ணப்பதாரர்கள் நற்சான்றுப் பத்திரங்களின் பிரதிகளை இணைக்கத்தேவையில்லை)

**குறிப்பு** :- இந்த சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இந்த விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் உண்மையானவையென்றும், மிகச் சரியானவை என்றும் நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன். இதில் அடங்கியுள்ள யாதேனும் விடயங்கள் பொய்யானவை அல்லது தவறானவை எனக் கண்டறியப்படுமிடத்து தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகவே தகுதியீனப்படுவதற்கும் நியமனத்தின் பின்பு அவ்வாறு கண்டறியப்படு மிடத்து நட்டஈடு வழங்கப்படாமலே விலக்கப்படுவதற்கும் அவை காரணமாகும் என்பதை நான் அறிவேன்.

திகதி :----.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

**திணைக்கள/ நிறுவனத் தலைவரின் சான்றுரை**

**(அரச சேவையில்/ மாகாண அரச சேவையில்/ அரச கூட்டுத்தாபனங்களில் மற்றும் நியதிச் சட்ட சபைகளின் சேவையிலீடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)**

பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

இந்நிறுவனத்தில் ................. ஆக பதவி வகிக்கும் திரு./ திருமதி/ செல்வி .................... இன் விண்ணப்பப்பத்திரத்தை பரிந்துரைத்து சமர்ப்பிக்கின்றேன். அவரது நடத்தையும் வேலையும் திருப்திகரமானதென்பதையும். ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதுவும் கிடையாதென்பதையும் அவ்வாறு நடவடிக்கைகள் எடுப்பதற்கு உத்தேசிக்கப்படவில்லை என்பதையும் இத்தால் சான்று படுத்துகின்றேன். அவர் இப்பதவிக்காக தெரிவு செய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க இயலும் /இயலாது.

-----,
திணைக்கள/ நிறுவத் தலைவரின் கையொப்பம்.
(உத்தியோகபூரவ இலச்சினை)

திகதி :----
09 - 1066

---

## இலங்கை அதிபர் சேவையின் II ஆம் வகுப்பின் I ஆம் தரத்திற்கு திறமை மற்றும் சிரேஷ்ட அடிப்படையில் பதவி உயர்வு வழங்கல் - 2006

இல. 1440 மற்றும் 2006.04.07 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேற்கூறப்பட்ட பதவி உயர்வு செயற்பாடு களுக்குரியதாக விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களுக்காக மாத்திரம் 100 புள்ளிகள் உயர்ந்த பட்சத்தின் கீழ் கல்விக் கொள்கை மற்றும் நிருவாக பாடத்திற்குரிய பரீட்சையை நடாத்த அரச சேவை ஆணைக்குழு சபையின் செயலாளரினால் உத்தரவிடப்பட்டுள்ளது.

*02. இப்பரீட்சையை நடாத்துவதற்காக உரிய தகவல்களை கீழ்க் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்படிவத்திற்கு அமைய - A4 கடதாசியின் இரு பக்கங்களிலும் குறிப்பிட்டு 2007.10.26 ஆந் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை அதிபர் சேவை பதவி உயர்வு 2006" எனக் குறிப்பிட வேண்டும்.*

*ஆரியரத்ன ஹேவகே,*
*செயலாளர்,*
*கல்வி அமைச்சு.*

*கல்வி அமைச்சு,*
*"இசுருபாய",*
*பத்தரமுல்லை,*
*2007.09.12.*

*மாதிரி விண்ணப்பப்படிவம்*

**இலங்கை அதிபர் சேவையின் II ஆம் வகுப்பின் I ஆம் தரத்திற்கு திறமை மற்றும் சிரேஷ்ட அடிப்படையில் பதவி உயர்வு வழங்கல் - 2006**

1. பெயர் : (வண./திரு./திருமதி/செல்வி) :----.
2. முகவரி :-
   2.1 சொந்த :----.
   2.2 அலுவலகம் :----.
3. தற்போதைய சேவை நிலையம் அமைந்துள்ள-
   3.1 கல்வி வலயம் :----.
   3.2 மாகாணம் :----.
4. இலங்கை அதிபர் சேவையில் தற்பொழுது வகிக்கும் பதவி
   4.1 வகுப்பு :----.
   4.2 தரம் :----.
5. உத்தேச பரீட்சைக்காகத் தோற்றும் மொழிமூலம் :- (சிங்களம்/ தமிழ் / ஆங்கிலம்)
6. உத்தேச பரீட்சைக்குத் தோற்ற முடியுமான அண்மித்த நகரம் :----.

மேற்கூறப்பட்ட தகவல்கள் உண்மையானதென உறுதிமொழிகிறேன்.

திகதி ;----.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

09 - 1136

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு

மாணவ தாதிமார் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்த்துக் கொள்ளல் - 2007 (தமிழ் மொழி மூலம் - வட மாகாணம்)

சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் மாணவ தாதிமார் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்த்துக்கொள்வதற்கு கீழே குறிப்பிடப் படும் தகைமைகளைக் கொண்டுள்ள வட மாகாணத்தில் வாழும் இலங்கை பிரஜைகளிடமிருந்து (விவாகமாகாத) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டு திருப்திகரமான முறையில் பயிற்சியை முடிப்பவர்கள் வட மாகாணத்தில் தாதியர்களாக நியமிக்கப்படுவர் (இந்த அமைச்சின் கீழ் நிருவகிக்கப்படும் வைத்தியசாலைகளின் தேவை கருதி ஆண் விண்ணப்பதாரிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்)

1. **கல்வித் தகைமைகள்.-** (அ) 2004, 2005, 2006 ஆம் ஆண்டுகளில் க. பொ. த. (உ. த.) பரீட்சைக்கு தமிழ் மொழி மூலம் தோற்றி ஏதாவதொரு பாடநெறியில் குறைந்த பட்சம் மூன்று பாடங்களில் தேர்ச்சியடைந்திருத்தல்.

(ஆ) க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (4) திறமைச் சித்தியுடன் ஆறு (6) பாடங்களில் தேர்ச்சியடைந்திருத்தல்.

(இ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கு மேற்குறிப்பிட்ட இரண்டு பரீட்சைகளினதும் சான்றிதழ்களின் போட்டோ பிரதிகள் உறுதிப்படுத்தப்பட்டு விண்ணப்பங்களுடன் இணைத்தல் வேண்டும்.

2. **ஏனைய தகைமைகள்.-** (அ) 2007.10.27 ஆந் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

(ஆ) *உயரம் :* 4 அடி 10 அங்குலத்திற்கு குறையாதிருத்தல்.

(இ) திருமணமாகாதவராக இருக்க வேண்டும்.

(ஈ) வட மாகாணத்தில் சேவையாற்ற விரும்புதலும் நல்ல சுகதேகியாகவும் இருத்தல் வேண்டும்.

(உ) தான் விண்ணப்பிக்கும் மாவட்டத்தினுள் மூன்றாண்டுகள் குடியிருப்பை உறுதிப்படுத்துவதற்கு வாக்காளர் பட்டியலில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை இணைத்து அனுப்ப வேண்டும். விண்ணப்பதாரியின் பெயர் வாக்காளர் பெயர்ப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டில்லாவிடின் அவரது பெற்றோர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருக்க வேண்டும்.

அவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பின் அப்பெயர்கள் தனது பெற்றோர் களின் பெயர்கள் என்பதை உறுதிப்படுத்துவதன் பொருட்டு பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்றை இணைத்து அனுப்ப வேண்டும்.

மேற்படி தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரர்கள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர் என்பதுடன் க. பொ த. உயர்தரப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின்படி அவ்வாண்டில் சமமாகும் வகையில் மாவட்ட அடிப்படையின் மீது தேவையான எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்படும்.

3. **விண்ணப்பிக்க வேண்டிய முறை.**- (அ) இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின்படி 8 1/2" x 13 1/2" அங்குல அளவுள்ள தாளில் இருபக்கங்களையும் பயன்படுத்திக் கொண்டு விண்ணப்பங்களைத் தயாரித்துக்கொள்ள வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள இலக்கம் 1 முதல் இலக்கம் 8 வரை உள்ள பிரிவுகள் முதல் பக்கத்திலும் இலக்கம் 9 ஆம் பிரிவு இரண்டாம் பக்கத்திலும் இலக்கம் 10 முதல் 12 வரையிலான பிரிவுகள் 3 ஆம் பக்கத்திலும் இருக்கும் வகையில் விண்ணப்பங்களைத் தயாரித்துக்கொள்ள வேண்டும்.

(ஆ) விண்ணப்பத்தை உரிய முறையில் பூரணப்படுத்தி விண்ணப்பிக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மாணவ தாதிமார் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்த்துக்கொள்ளல் - 2007 ( தமிழ் மொழி மூலம்) " எனக் குறிப்பிட்டு 2007.10.27 ஆந் திகதியில் அல்லது அதற்கு முன்பு, "பணிப்பாளர் (நிர்வாகம்) 1, சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு, 'சுவசிரிபாய', 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10" என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலின் மூலம் அனுப்ப வேண்டும். தாமதமாகி பெறப்படும் விண்ணப்பங்கள் இரத்துச் செய்யப்படுவதுடன் தபாலில் காணாமற் போதல், தாமதித்தல் என்பன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

இலங்கையில் நிர்வாக சேவையில்/கல்விச் சேவையில்/அரசாங் கத்தின் கணக்காளர் சேவையில்/அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஒருவர்/சமாதான நீதவான்/சட்டத்தரணி ஒருவர் அல்லது வருடாந்தம் ரூபா 80,160 இற்குக் குறையாத சம்பளம் பெற்றுக் கொள்ளும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்பத்திரத்தில் உள்ள முத்திரைக் கூட்டில் ரூபா 500 க்கான முத்திரை ஒட்டி கையொப்பம் இட்டு செல்லுபடி அற்றதாக்க வேண்டும்.

4. **பயிற்சித் திட்டம்.**- (அ) தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்ப தாரர்கள் மாணவ ஆண்/பெண் தாதிமார்களாக யாழ்ப்பாணம் தாதிமார் பயிற்சிப் பாடசாலைக்கு உட்படுத்தப்படுவதுடன், அவர்கள் தமிழ் மொழிமூலம் 3 ஆண்டுகள் பயிற்சிப்பாடத்திட்டம் ஒன்றை பயிலுதல் வேண்டும்.

(ஆ) பயிற்சியின் பொருட்டு உட்படுத்திக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் தாதிமார் பயிற்சிப் பாடசாலைகளில் வலுவிலுள்ள சட்டதிட்ட கோவையொன்று பயிலுநர்களுக்கு வழங்கப்படும். இச்சட்டதிட்டங் களுக்கும் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் ஏனைய சட்டதிட்டங் களுக்கும் அவர்கள் அமைதல் வேண்டும்.

(இ) பயிற்சி பெறும் கால எல்லையினுள் குறிப்பிட்ட பரீட்சைகளில் தேர்ச்சி அடையாத அல்லது வேலையும் நடத்தையும் திருப்தியற்ற அல்லது தான் உட்படுத்தப்பட்ட பாடசாலையின் பரீட்சைகள் மற்றும் விடுமுறை நிபந்தனைகள் ஆகியவற்றை கடைபிடிக்கத் தவறும் பயிலுநர்கள் பயிற்சியினின்றும் எச்சந்தர்ப்பத்திலேனும் நட்டஈடு எதுவுமின்றி நிறுத்தப்படலாம்.

பயிற்சிக்காலத்தில் எந்தவிதமான விடுதலைகளுக்கும் உரித் தில்லாததோடு இக்காலத்தில் வரவின்மைக்காக விசேட கொடுப்பன விலிருந்து ஒரு தொகை கழிக்கப்படும் அத்தோடு பரீட்சை எழுதுவதற்கு 80% க்கு குறையாத வரவு இருத்தல் வேண்டும்.

(ஈ) தாதிமார் பாடசாலையொன்றில் பயிற்சி பெறும் காலத்தில் பயிலுநர்களுக்குக் கீழே குறிப்பிடப்படும் வகையில் கொடுப்பனவு வழங்கப்படும்.

(1) முதலாம் வருடம் - மாதத்திற்கு ரூபா 12,920
(2) இரண்டாம் வருடம் - மாதத்திற்கு ரூபா 13,040
(3) மூன்றாம் வருடம் - மாதத்திற்கு ரூபா 13,160

பயிற்சியை திருப்திகரமாக பூரணப்படுத்திய பின்பு இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த பயிலுநர்களிற்கு II ஆம் தரத்தின் "ஆ" பிரிவின் பதவி வெற்றிடங்கள் ஏற்படும் வகையில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நியமனங்கள் வழங்கப்படும்.

(உ) பயிற்சி பெறும் காலத்தில் பயிற்சிகளினின்றும் விலகிக் கொண்டால் அல்லது பயிற்சியை விட்டுச் சென்றால் பயிற்சிக்காலத்தில் அவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்ட செலவினத்தின் பொருட்டு செலவிடப்பட்ட பணமும் அவரினால் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தாவிடின் அப்பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

5. **விவாகமாகாத நிபந்தனைகளும் உடன்படிக்கையும்.**- (அ) சகல விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்களை அனுப்பும் திகதியில் விவாகமாகாதவர்களாக இருக்க வேண்டும் என்பதுடன் பயிற்சி பெற்றுக்கொள்ளும் மூன்றாண்டு காலத்தினுள்ளும் விவாகமாகா திருத்தல் கட்டாயமாகும். விவாகம் ஆகாதவர் என்பதை உறுதிப்படுத்து வதன் பொருட்டு கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் ஒன்றை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இது பிரதேச சபை செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) மாணவ ஆண்/பெண் தாதிமார், தாதிமார் பயிற்சிப் பாடசாலைக்கு உட்படும் பொழுது திருப்திகரமாகப் பயிற்சியை முடிப்பதென்றும் பயிற்சியைப் பூரணப்படுத்திய பின்பு குறைந்த பட்சம் 10 ஆண்டு காலம் சுகாதார சேவைகள் திணைக்களத்தில் சேவையாற்றுவதென்றும் சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்துடன் உடன்படிக்கை யொன்றுக்கு உட்படுதல் வேண்டும். சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் இக்கால எல்லை காலத்திற்கு காலம் தீர்மானிக்கப் படும்.

6. **சேவையில் ஈடுபடுத்தும் நியதிகள்.**- (அ) மேற்படி பயிற்சியின் பின்பு நடாத்தப்படும் இறுதிப் பரீட்சையின் பெறுபேறுகளின் மீது நியமிக்கப்படும் பதவிநிலைத் தாதிமார் பதவிகள் உதவித் தொகை ஓய்வூதியத்துடன் கூடியது.

(ஆ) II ஆம் தரத்தின் 'ஆ' பிரிவின் பதவிநிலை தாதிமார் பதவிகளுக்கு மூன்று ஆண்டுகள் தகுதிகூர் நிலைக்காலத்திற்கு அமைவாக நியமிக்கப்படும்.

7. **சேவை நிபந்தனைகள்.**- (அ) சகல பயிலுநர்களும் பயிற்சி ஆரம்பிக்க முன்பு மருத்துவ சோதனை செய்வித்துக் கொள்ளல் வேண்டும்.

(ஆ) பொது நிருவாக சுற்றறிக்கை 6/2006 இன்படி ரூபா 15,080 - 5 x 150 - 9 x 240 - 7 x 240 - 20 x 320 - ரூபா 26,420 சம்பள அளவுத்திட்டத்தின் படி தாதி உத்தியோகத்தர்கள் II ஆம் தரத்தின் 'ஆ' பிரிவின் பதவிகளுக்கு நிலவும் வெற்றிடங்களின் படி நியமிக்கப்படுவர்.

(இ) தாதிமார் சேவையின் சகல உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கும், சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் நியமிக்கப்படும் கோட்பாடுகளின்படி புரியப்படும் இடமாற்றங்கள், நிதி உட்பட ஏனைய ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தினால் அடிக்கடி விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும் கட்டளைகளுக்கும் அமைதல் வேண்டும்.

(வைத்தியர்) எச். ஏ. பீ. கஹந்தலியனகே,
செயலாளர்,
சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மாணவ ஆண்/பெண் தாதிமார் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்த்துக்கொள்ளதல் - 2007**
**(தமிழ் மொழி மூலம் - வடமாகாணம்)**

1. (அ) முதலெழுத்துக்களுடன் இறுதிப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :-----.
(ஆ) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :-----.

2. தபால் முகவரி :- (ஆங்கிலத்தில்) [ ]

3. (i) நிரந்தர முகவரி (ஆங்கிலத்தில்) [ ]

(ii) மாவட்டம் (ஆங்கிலத்தில்) [ ]

4. பிறந்த திகதி :-
ஆண்டு :----- மாதம் :----- திகதி :-----.

5. பால் :

| | |
|---|---|
| ஆண் | |
| பெண் | |

(ஏற்புடைய கூட்டில் சரி ✓ அடையாளம் இடவும்)

6. நீர் இலங்கைப் பிரசையா ?

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

(ஏற்புடைய கூட்டில் சரி ✓ அடையாளம் இடவும்)

7. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.

8. உயரம் :- அடி :----- அங்குலம் :-----.

9. கல்விப் பொதுத் தராதரப்பத்திரம் (உ. த.) பரீட்சையில் :- (தோற்றிய பாடங்கள் மற்றும் (புள்ளிகள் குறிப்பிடப்பட்ட பிரதியை இணைக்கவும்)

(அ) ஆண்டு :----- சுட்டிலக்கம் :-----

| பாடம் | தரம் | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

(ஆ) க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை முதலமர்வு :

(i) பரீட்சை வருடமும் மாதமும் :-----.
(ii) சுட்டிலக்கம் :-----.

| பாடம் | தரம் | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |
| 11. | | |
| 12. | | |

இரண்டாம் அமர்வு :

(i) பரீட்சை வருடமும் மாதமும் :-----.
(ii) சுட்டிலக்கம் :-----.

| பாடம் | தரம் | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |
| 11. | | |
| 12. | | |

10. நீதிமன்றமொன்றில் எப்போதாவது ஏதாவது குற்றம் தொடர்பில் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா? :-

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

'ஆம்' எனின் விபரம் தருக :-----.

11. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் எனது அறிவிற்கு எட்டியவகையில் உண்மையானவைகள் எனவும், சரியானவைகளெனவும் கௌவரத்துடன் வெளிப்படுத்துகிறேன்.

(ஆ) என்னால் தரப்பட்டுள்ள இத்தகவல்கள் பொய்யானவைகள் எனக் கண்டுபிடிக்கப்படின் சேவைக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கு முன்பு தகுதியற்றவன் எனவும் நியமனத்தின் பின்பு அவ்வாறு கண்டுபிடிக்கப்படின் சேவையினின்றும் விலக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

| |
|---|
| இங்கு ரூபா 500 க்கான முத்திரை ஒட்டி அதன் மேல் கையொப்பம் இட்டு செல்லுபடி அற்றதாக்குக. |

-----
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

12. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் ................................... என்பவரை நான் நான்றாக அறிவேன் என்றும் அவர் 2007 ..................... ஆந் திகதி என் முன்னிலையில் அவருடைய கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின்
முழுப் பெயர் :-----
பதவி :-----
முகவரி :-----
திகதி :-----

9-1131

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.